**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108556

1. District / மாவட்டம் : **Tiruvannamalai** PS / காவல்நிலையம்: **Tiruvannamalai V&AC** Year / ஆண்டு: **2021** FIR No. / மு.த.அ. எண்: **08/2021** Date / நாள்: **01.10.2021**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: **amended by Act 16 of 2018.** Sections பிரிவுகள்: **102 CrPC.**
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் **30.09.2021** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் **20.00 hrs** Time to : நேரம் வரை **03.00 hrs**
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **01.10.2021** Time : நேரம் **15.00 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **72 Kms North East**
**O/o the Sub-Registrar, Vandavasi, Tiruvannamalai.**
Beat Number முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **M. SURESHBABU**
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் **MUNIRATHINAM**
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality நாட்டினம் **Indian**
(e) Passport No வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of issue வழங்கப்பட்ட நாள்
Place of Issue வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் **Taluk Supply Officer**
(g) Address முகவரி **Chetpet, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. **V. Rajkumar, S/o Venkatesan, Sub-Registrar, Grade-I, Sub-Registrar Office, Vandavsi, Tiruvannamalai District**
2. **R.Gugan, S/o Ramamaiah, Data Entry Operator, Sub-Registrar Office, Vandavsi, Tiruvannamalai District**

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்

------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்தனுப்பப்படுகிறது :**

இன்று 01.10.2021-ஆம் தேதி பகல் 15.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில், கடந்த 30.09.2021-ஆம் தேதி திரு.மு.சுரேஷ்பாபு, வட்ட வழங்கல் அலுவலர், சேத்பட், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் தலைமையில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை தொடர்பாக திரு.மு.சுரேஷ்பாபு, வட்ட வழங்கல் அலுவலர்,சேத்பட், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் கொடுத்த புகார் மனு இன்று 01.10.2021-ஆம் தேதி பெறப்பட்டது. மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.மு.சுரேஷ்பாபு, வட்ட வழங்கல் அலுவலர்,சேத்பட், திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை.நாள்: 01.10.2021 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.09.2021 அன்று கூட்டு திடீர் ஆய்வு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக.

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/2021 [signature] 01/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் P. ANBALAGAN
Rank: நிலை Inspector No. எண் VSAC TVM

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.10.2021 at 1630 hrs.

பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள். சேத்பட்டில் வட்ட வழங்கல் அலுவலராக நான் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பணிபுரிந்து வருகிறேன். அலுவலகத்தில் பத்திரம், பிறபதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் **30.09.2021**-ந் தேதி இரவு **20.00** மணிக்கு என்னுடைய தலைமையில், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர் திரு.ரா.குகன் என்பவரை தணிக்கை செய்ய, அவரின் இடது புற பேண்ட் பாக்கெட்டில் ரூபாய்.**3400/-** வைத்திருந்தார். அந்தப்பணத்தை பற்றி விசாரிக்க தான் அலுவலத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனிநபர் ரொக்கப்பதிவேட்டில் ரூ.**900/-** பதிவு செய்திருப்பதாகவும், மீதமுள்ள பணத்திற்கு சரியான முகாந்திரம் கூற முடியாததால் ரூபாய்.**2,500/-** அந்த பணம் பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடம் இலஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என்று மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்திருந்த ரூ.**900/-** திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த திரு.அ.கார்த்திக், வயது.**(28/2021)**, த/பெ அருணாசலம், நெ.**37/8** கேசவ நகர், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் என்பவரை சோதனை செய்ய அவருடைய பேண்ட்டின் பின்பக்க பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க அதில் **3000** ரூபாய் ஒரு கத்தையாகவும் மற்றும் ரூபாய் **22,500/-** மற்றொரு கத்தையாகவும் இருந்தது. அந்தப்பணத்தை பற்றி விசாரிக்க ரூபாய் **3,000/-** தன்னுடைய குழந்தையின் மருத்துவ செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால் திரும்ப அவரிடமே ரூபாய் **3,000/-** ஒப்படைக்கப்பட்டது. மீதம் இருந்த ரூபாய் **22,500/-** பற்றி கேட்ட போது அந்தப்பணம் சார்பதிவாளர் திரு.ராஜ்குமார் அவர்கள் என்னை சார்பதிவாளர்

அலுவலத்தில் உள்ள கணினி அறைக்கு அழைத்து என்னிடம் கொடுத்து வைத்துக்கொள் திரும்ப நான் வாங்கிக்கொள்கிறேன் என்று கூறி கொடுத்த தொகையை தான் எதுவும் கேட்காமல் வாங்கி தன்னுடைய பேண்ட்டின் பின்பக்கெட்டில் வைத்துக்கொண்டதாகவும் கூறியதால் அந்த பணம் ரூபாய் 22,500/- பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடம் இலஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என்று மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சார் பதிவாளர் திரு.வெ.ராஜ்குமார் அவர்களிடம் சார் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, அவர் எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அலுவலகத்தில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர் மற்றும் கேமிரா ஆப்பரேட்டர் ஆகியோர்களுக்காக பராமரிக்கப்படும் வருகை பதிவேட்டை எடுத்து சார்பதிவாளர் அவர்கள் ஆஜர் செய்தார். மேற்படி இரண்டு வருகை பதிவேட்டையும் விசாரணை நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் ரொக்கப்பதிவேட்டை கேட்க சார்பதிவாளர் அவர்கள் எடுத்து ஆஜர் செய்தார், அதை விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், ஆன் லைனில் இன்று 30.09.2021-ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட பத்திரப்பதிவு விவரங்களை சார் பதிவாளரிடம் கேட்க, சார்பதிவாளர் திரு.வெ.ராஜ்குமார் அவர்கள் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 1 முதல் 34 பக்கங்கள் கொண்ட ஆவணங்களின் சுருக்கத்தை சமர்ப்பித்தார். அந்த ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 25,000/- பத்திரப்பதிவிற்கு வரும் பொதுமக்களிடம் கையூட்டாக பெற்று இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்படி தொகை ரூபாய் 25,000/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை சம்மந்தமாக 30.09.2021-ஆம் தேதி இரவு 20.00 மணி முதல் 01.10.2021-ஆம் தேதி காலை 03.00 வரை ஒரு செயல்முறை தயார் செய்யப்பட்டது. இன்று 01.10.2021-ஆம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டதில் கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரூ.25,000/-, கைப்பற்றப்பட்ட செயல்முறை ஆவணங்கள் மற்றும் திடீர் சோதனையின் போது தயார் செய்த செயல்முறை ஆகியவற்றுடன் இணைத்து கொடுக்கும் புகார் மனு மீது தக்க நடவடிக்கை

எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். SdXXXXX 01.10.2021 (.மு.சுரேஷ்பாபு), வட்ட வழங்கல் அலுவலர், சேத்பட், திருவண்ணாமலை மாவட்டம்.

Sir, Received the Complaint on 01.10.2021 at 15.00 hrs, informed orally to the Superintendent of Police, DVAC (western Range), Chennai and after getting permission, a case in Tiruvannamalai V&AC 08/2021 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C was registered on 01.10.2021 at 15.30 hrs. (Sd-XXXXX) 01/10/2021, Inspector of Police, V&AC, TVM.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல், செயல்முறை, வாக்குமூலங்கள் மற்றும் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி திருவண்ணாமலை அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

01/10/2021
(P. ANBALAGAN)
Inspector of police
V&AC, Tiruvannamalai